# அருள்ஜோதி

சுத்த சன்மார்க்கத் தமிழ் திங்களிதழ்

தனிஇதழ் ரூ.10/– ஆண்டு சந்தா ரூ.110/–

அருள்: 27

சோபகிருது ஆண்டு/ கார்த்திகை–மார்கழி / டிசம்பர் –2023

மாத பூசத்திருநாள்: 01.12.2023, 29.12.2023 அடுத்த மாதம் பூசம்: 25.01.2024

ஜோதி: 12



தெய்வத்திரு.

**சதீஷ்ராஜ் அடிகளார்,**

நிறுவனர்

தயவுத்திருமதி.

**தனலட்சுமி அம்மையார்,**

ஆசிரியர், வெளியிடுபவர்

மற்றும் உரிமையாளர்

பதிவு அலுவலகம்:

**திருஅருட்பிரகாச வள்ளலார் அலுவலகம்,**

புதிய எண் 33, பழைய எண். 17, கென்னடி சதுக்கம்,

முதன்மைச்சாலை, சென்னை– 600011.

தொடர்புக்கு: 044–25570770 9003034056


## பொருளடக்கம்


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| வள்ளலாருக்கு மட்டுமே வாய்த்த வரங்கள் | 4 |
| வடலூர் அருட்பயணம் | 7 |
| அருட்பெருஞ்ஜோதி அகவல் உரை | 8 |
| செய்யப்பட்ட பாவங்களும், செய்ய வேண்டிய வள்ளலார் சொன்ன பரிகாரங்களும் | 10 |
| அருள் எவ்வகையில் வரும் | 11 |
| கெட்ட எண்ணம் உள்ளவர்களை இறை அருள் என்ன செய்யும்? | 12 |
| இறைவனை எப்படி முழுமையாக நம்ப வேண்டும்? | 14 |
| நம்மை நாமே திருத்திக் கொள்வது | 20 |
| சாப்பிடும் பொழுது பேசக்கூடாது | 24 |
| வள்ளலார் உவமையாக சொன்ன உயர்ந்த ஞானக்கதை | 26 |
| அன்பர்களின் அனுபவங்கள் | 28 |
| எது ஜீவகாருண்யம்? | 30 |

# வள்ளலாருக்கு மட்டுமே வாய்த்த வரங்கள்

(மூன்றாவது தத்துவம்)

## என்னைச் சுற்றி சுற்றித் திரிந்து அருள்கின்றாய் எனல்

நீயே என் பிள்ளை நீ எனது குலத்து முதன் மகனே என்றெல்லாம் ஆண்டவ ரால் பிள்ளைப் பட்டம் சூட்டப் பெற்ற வர் மட்டுமல்ல, பிள்ளையாகவும் ஏற்றுக் கொள்ளப் பெற்றவர் வள்ளலார்.

ஒரு தாயோ, தகப்பனோ தாம் பெற்ற பிள்ளையைச் சுற்றிச் சுற்றி, வளைய வந்து கொஞ்சி மகிழ்வார்கள் அல்லவா? அதுபோல் அம்மையும் அப்பனுமாக வீற்றி ருந்தவர் அருட்பெருஞ்சோதி ஆண்டவர். அவர் வள்ளலாரை அன்புடன் பாதுகாப் புக்காகச் சுற்றி சுற்றி வந்து மகிழ்கிறார். ஆண்டவர் தம்மைச் சுற்றிச் சுற்றி வருவது வள்ளலாருக்கு ஒரு சங்கடமான சூழ்நிலை யாக இருக்கிறது. ஒருநாள் ஆண்டவரைப் பார்த்து நீங்கள் அடிக்கடி என் அகத்தில் இருந்து சுற்றுவது சரிதான். ஆனால் உலகில் புறத்திலும் ஜோதி வடிவமாக என் னுடன் அலைந்து திரிந்து திரிந்து எனக்கு அருள் புரிகின்றீரே என ஆண்டவரையே பார்த்து வள்ளலார் கேட்கிறார் எனில், வள்ளலார் பெற்ற அருளின் அளவு தான் எவ்வளவு? ஏனெனில் அவரை விடாது சுற்றி, திரிந்து திரிந்து அருளைக் கொடுக் கின்றார் ஆண்டவர்.

ஆண்டவருக்கு வள்ளலார் மேல் இருந்த பிள்ளைப் பாசம் அளவு கடந்தது என்பதற்கு இப்பாடலே சான்று.

உலகில் எந்த ஒரு ஞானியையும் தமக் குப் பிள்ளையாக, தமது அருட்குலத்திற்கு மூத்த பிள்ளையாக ஏற்றுக் கொண்டது இல்லை ஆண்டவர். இந்த வரம் வள்ள லாருக்கு மட்டுமே வாய்த்தது. பாடலைப் பார்ப்போம்.

அடிக்கடி என் அகத்தினிலும் புறத்தினிலும் சோதி
அருளுருவாய்த் திரிந்துதிரிந் தருள்கின்ற பொருளே
படிக்களவின் மறைமுடிமேல் ஆகமத்தின் முடிமேல்
பதித்தபதம் என் முடிமேல் பதித்த தனிப் பதியே
பெயடிக் கனகத் திருமேனித் திருமணங் கற்பூரப்
பொடி மணத்தோ டகம்புறமும் புதுமணஞ்செய் அமுதே
அடிக்கனக அம்பலத்தே திருச்சிற்றம் பலத்தே
ஆடல்புரி அரசேயென் அலங்கலணிந் தருளே 4113

### வள்ளலார் ஒரு புதிய உலகையும் அண்டங்களையும் படைக்கும் ஆற்றல் பெற்றது

ஒரு உலகைப் புதிதாகப் படைத்தல் என்பது கற்பனையிலும் எட்டாத ஒன்று. புதியதோர் உலகம் செய்வோம், கெட்ட போரிடும் எண்ணத்தை வேரோடு சாய்ப் போம் என இன்றுள்ள கவிஞர்கள் கதைக் கிறார்கள். உலக மக்கள் அனைவரும் கூடி புதிய ஒரு உலகு செய்வோம் என்பது, ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவது பற் றியது. மாற்றமாகிய புதிது வேறு, புதிதா கவே படைப்பது என்பது வேறு. ஒரு உல கத்தைத் தனி ஒருவராகிய வள்ளலாரே படைப்பேன் என்பது. திருமூலர் ஐந்தா யிரம் ஆண்டுகட்கு முன்னர் தம் திருமந்



திரத்தில் உலகு உண்டுமிழ் செய்வேன் எனக் கூறுகிறார். ஒரு உலகை நானே உண்டு அதாவது இல்லாதாக்கியும், ஒரு புதிய உலகை உமிழ்வது என்பது வெளிக் கொணர்வேன் என்றும் கூறியுள்ளார். ஆக, திருமூலர் ஒரு உலகைப் படைக்க ஆற்றல் பெற்ற முதல் ஞானியாவார். ஆனால் அவர் தாம் ஒரு அண்டத்தைப் புதிதாகப் படைப்பேன் என்று கூறிட வில்லை.

அண்டத்தைப் பற்றி மணிவாசகர் தம் திரு அண்டப் பகுதியில் அண்டப் பகு தியின் உண்டைப் பிறக்கம். அளப்பரும் காட்சி வளப்பருந்தன்மை, ஒன்ற னுக் கொன்று நின்றெழில் பகரின் நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன என் கின்றார். இதன் பொருள் எல்லா அண்டங்களும் உருண்டை வடிவமாகவே உள்ளன. அதனதன் காட்சிகளைக் காணும் பொழுது அளவிட்டுக் கூற முடியாத அருங்காட்சிகளாக உள்ளன. அந்தந்த அண்டங்களின் வளப்பத்தின் தன்மை சொல்லில் அடங்காது, ஒரு அண்டத்தின் காட்சிகளுக்கும், வளப்ப நிறைவுக்கும். மற்றொரு அண்டத்தின் காட்சிகளுக்கும் வளப்ப நிறைவுக்கும் வித்தியாசம் நூற்றி ஒரு கோடிகளுக்கும் மேலாக உள்ளன என்கிறார்.

ஆக மாணிக்கவாசகர் அண்டங்களைக் காணும் பேறு பெற்றார். இவ்வளவு வித் தியாசமான அண்டங்கள் எண்ணில டங்காதனவாகும். அவை களை உருவாக் கும் ஆற்றல் ஆண்டவருக்கன்றி எவரால் முடியும்? ஆனால் வள்ளலாருக்கு இந்த ஆற்றலை ஆண்டவர் தந்துள்ளார். ஒரு அண்டத்தைப் படைக்கும் ஆற்றல் அல்ல. அண்டங்கள் அனைத்தையும் படைக்கும் ஆற்றலைத் தந்தார். அனைத்தும் என்பது எண்ணிலடங்கா அண்டங்கள். அவை ஒவ்வொன்றும் நூற்றி ஒரு கோடிக்கும் மேலாக வித்தியாசங்களை படைக்க வேண்டும். இவ்வாறான ஆற்றல் இயற்கை உண்மைப் பெரும் பதியாம் ஆண்டவருக் கன்றி எவர்க்கு கை வரும்? ஆண்டவர் தர இந்த ஆற்றலைப் பெற்றார் வள்ள லார்.

திருமூலர் உலகை மட்டுமே படைக் கும் ஆற்றல் பெற்றவர். பெருமானார் உலகோடு அண்டங்களையும் படைக் கும் ஆற்றலைப் பெற்றவர். இதனை ஆண்டவர் மற்றையாருக்கும் தரவில்லை. பாடலைப் பார்ப்போம்.

**ஆழிசூழ் உலகோடு அண்டங்கள் அனைத்தும்**
**அளிக்கஎன் றருளினன் என்றாள**
**ஏழியன் மாடமிசையுற வைத்தான்**
**என்றனள் எனது மெல் லியளே 5688**

## வள்ளலார் ஓருடம்பு வடிவம் ஆனார்

உலகில் உள்ள மனிதர்கள் முதல் உயி ரினங்கள் அனைத்தும் உடலும் உயிரும் பெற்றே வாழ்ந்து மடிந்து பிறக்கின்றன. ஒரு மனிதனோ, ஒரு உயிரோ வாழும் பொழுது அதனது உடம்பும், உயிரும் வேறுபட்டே செயல்படுகின்றன. உடல் உயிரோடு கூடி வாழும் பொழுதே இளமை என்ற அழகான தோற்றம் உண்டாகின்றது. ஆனால் ஒரு குறிப்பிட்ட வயதிற்கு மேல் உடம்பு முதுமை அடைந்து, ஆற்றல்

குன்றி, அழகு கெட்டு இறந்து விடுகிறது. ஆக்கத்தைத் தந்த உயிர், எப்படி அழிவைத் தந்தது. அல்லது உயிரால் ஆக்கம் பெற்ற உடல் பின் எப்படி அழிவுறுகிறது?

இதிலிருந்து உயிருக்குரிய உடலாக உடல் இல்லை என்பதும், உடலுக் குரிய உயிராக உயிர் இல்லை என்பதும் புலனா கின்றதல்லவா? இவற்றைச் சேர்க்கின்ற ஒரு நிலையை நம்முள் இயற்கை வைத் துள்ளது. இதனை நம்முள் நாம் கண்டு பிடிக்காது. உணராது வாழ்ந்து அழிந்து மடிகின்றோம்.

மனிதன் என்கின்ற பொழுது அவன் உடம்பாகவும், உயிராகவும் ஆன இரண்டாக உள்ளான். அவன் உடம்பை உயிராக மாற்றி, உயிரை உடம்பாக மாற் றினால் உயிர், உடம்பு என்ற இரண்டாக இல்லாது உயிருடம்பாக ஆகி

விடலாம் அல்லவா? உயிரே உடம்பாக ஆனால் உடம்புக்கு அழிவில்லை தானே? ஏனெனில் உயிர் அழிவற்றதல்லவா? இந்த உளவை ஆண்டவர் சொல்லிக் கொடுத்து வள்ளலாரின் உடம்பு, உயிருடம்பாக ஆயிற்று. இரண்டில்லாத ஒன்றாக ஆன தினால், வள்ளலார் உடம்பு என்றும் இளமையோடும், அழிவற்றும் இருந்தது.

இப்படிப்பட்ட உயிராம் ஒருடம்பைப் பற்றித் திருமந்திரம் கூறுகிறதே தவிர, திருமூலர் தான் பெற்றதாகக் குறிப்பிட வில்லை. வள்ளலாருக்கு ஆண்டவரே ஒரு வடிவாம் ஒருடம்பை உவந்து அளித் துள்ளார். இந்த வரத்தை மற்ற யாரும் பெறவில்லை. பாடலைப் பார்ப்போம்.

**நானென்றும் தானென்றும் நாடாத நிலையில்**
**ஞானவடி வாய் விளங்கும் வானநடு நிலையே**
**ஊனென்றும் உயிரென்றும் குறியாமே முழுதும்**
**ஒரு வடிவாம் திருவடிவம் உவந்தளித்த பதியே 4110**

## பொன் உடம்பில் எட்டு வகைப் பொன் உடம்பு பெற்றது

உலகில் பொன் ஆகிய தங்கம் ஒரே வகையில் மட்டும் உருவாகவில்லை. அத னுடைய தரங்கள் வேறுபட்டுள்ளன. ஒவ்வொரு தரத்தின் வேறுபாட்டிற்கும் ஒவ்வொரு பெயர் சூட்டி வகைப்படுத்து கின்றனர்.

வள்ளலார் பொன் உடம்பு பெற்றார் எனின் ஆண்டவரால் இப்பூமியில் உரு வாக்கப்பெற்ற அத்தனை விதமான பொன்னுடம்பாகவும் அல்லவா ஆகி யிருக்க வேண்டும்? ஆம். அத்தனைவித மான பொன்னுடம்பாகவே வள்ளலாரது உடம்பை ஆண்டவர் ஆக்கினார்.

பொன்னின் வகைகள் தாம் என்ன என் னவென்று நமக்குத் தெரியாது. இதனை யும் வள்ளலாரே கூறுகிறார். 1. அருட் பொன் 2. பெரும் பொன் 3. அரும் பொன் 4. செழும் பொன் 5. பசும் பொன் 6. செம் பொன் 7. சிவமயமாம் பொன் 8. காற்று, அனல், ஆகாயம் எல்லாம் கலந்த வண்ணப் பொன் என எட்டு வகையான பொன்னைக் கூறுகிறார் வள்ளலார். ஆக இந்த எட்டு வகையான பொன்னின் நிலைகளை வள்ளலார் உடம்பைப் பெற வைக்கிறார் ஆண்டவர்.

பொன்னுடம்பாம் சுத்த உடம்பே பெறாத பொழுது. முத்தேக சித்தி என் பதையே அறியாத நிலையில் பொன் உடம் பின் எட்டு வகைப் பொன் னுடம்பை வள்ளலார் பெற்றார் எனில், ஆண்டவ ரால் அளிக்கப் பெறுகிறார் எனில் யாரே பெற்றார்? இத்தனை விதமான பொன் னுடம்புகளையும் வள்ளலார் பெற்றது அவருக்கு மட்டுமே வாய்த்த வரம் இது. பாடலைப் பார்ப்போம்.

**மாற்றையளந் தறிந்திலமென் றருமறையா கமங்கள்**
**வழுத்த மணி மன்றோங்கி வயங்குமருட் பொன்னை**
**ஆற்றல்மிகு பெரும் பொன்னை ஐந்தொழிலும் புரியும்**
**அரும் பொன்னை என்தன்னை ஆண்டசெழும் பொன்னை**
**தேற்றமிகும் பசும் பொன்னைச் செம்பொன்னை ஞான**
**சிதம்பரத்தே விளங்கி வளர் சிவமயமாம் பொன்னை**
**காற்றனல்ஆ காயமெல்லாம் கலந்த வண்ணப் பொன்னை**
**கண்டு கொண்டேன் கனிந் துகொண்டேன் கலந்துகொண் டேன்.**
**களித்தே-4008**



# வடலூர் அருட்பயணம்

## அன்பார்ந்த வாசகப் பெருமக்களுக்கு ஓர் நற்செய்தி!

ஒவ்வொரு மாதப்பூச நன்னாளன்றும் அருள்ஜோதி அன்ன ஆலயம் சார்பாக, வடலூர் அருட்பயணம் ஏற்பாடு செய்யப்படுகிறது.

<u>அருட்பயணத்தில் தரிசிக்கப்படும் திருத்தலங்கள்</u>

1.சத்திய தருமச்சாலை, 2.சத்திய ஞானசபை, 3. வள்ளல் பெருமான் அவதரித்த மருதூர் இல்லம், 4.கருங்குழி இல்லம் 5.தீஞ்சுவை நீரோடை மற்றும் 6.சித்திவளாகம்.

இந்தப் புனித பயணத்தில் கலந்துகொள்பவர்கள் ஏழு நாட்களுக்கு முன்னதாகவே பதிவு செய்ய வேண்டும். பதிவுக்கட்டணம் ரூ.900 (உணவு உள்பட) பயணம் அருள்ஜோதி அன்ன ஆலயத்தில் இருந்து காலை 6.30 மணிக்குப் புறப்பட்டு மறுநாள் காலை 5.00 மணிக்கு அழைத்துவரப்படுவர். எனவே பெயர்களை முன்பதிவு செய்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**தொடர்புக்கு: 9003034056**

**மாதப்பூச நாள்: 01.12.2023, 29.12.2023**

**குறிப்பு: அடுத்த பயணம்: 25–01–2024**

# அருட்பெருஞ்ஜோதி

## அகவல் உரை

**நெருப்(பு) அது நிலைநடு நிலைஎலாம் அளவி**
**அருப்பிட வகுத்த அருட்பெருஞ் ஜோதி 362**

எந்த உயிரிலும், எப்பொருள்களிலும் நடுவிலிருந்து செயல்படும் சக்தி கொண்ட நெருப்பாகிய பூதத்தின் இயல்பாக, உள்ளும் புறமும் சுடும் சக்தியும் ஒளிசெய் சக்தியும் ஒருசேரக் கலந்து நிலவச் சிறப்புடன் படைத்தருளியது அருட்பெருஞ்ஜோதி.

**நீர்நிலை திரைவளர் நிலைதனை அளவி**
**ஆர்வுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 364**

நீராகிய பூதத்தின் இயல்பான அலை பாய்தல், மற்றும் பள்ளம் நோக்கி ஓடுதலும் ஆகிய தன்மைகளை இயக்கி, எங்கும் நிறைந்து இயங்குமாறு படைத்தருளியது அருட்பெருஞ்ஜோதி.

**புவிநிலை சுத்தமாம் பொற்பதி அளவி**
**அவைஉற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 366**

மண்ணாகிய பூதத்தின் இயல்பு உயிர்களுக்கும், பொருள்கள் முழுமைக்கும் மிகுந்த இடம் தந்து, அழகுற மேடு, மணல், கல், பாறை, குன்று, மலை இவை யாவுமாகித் தோன்றி விளங்க அமைத்தருள்வது அருட்பெருஞ்ஜோதி.

### மண் இயல்

**மண்ணினில் திண்மையை வகுத்துஅதில் கிடக்கை**
**அண்உற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 368**

மண்ணாகிய பூதத்துக்கு மண் அணுச் செறிவின் இறுக்கத்தால் கடினத்தன்மையை அமைத்து, அதில் அசையும் அசையாப் பொருள்கள் அனைத்தும் இருக்கும்படியும், மற்ற பூதங்களைத் தாங்க வைத்துப் பொருந்தி நிலைத்திருக்கப் படைத்தளித்தது அருட்பெருஞ்ஜோதி.

**மண்ணினில் பொன்மை வகுத்துஅதில் ஐமையை**
**அண்உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 370**


மண்ணாகிய பூதத்துக்கு நிறம், தன்மை இவற்றை அமைத்து, அதில் பொன்மை, வெண்மை. செம்மை. கருமை, புகைநிறம் ஆகிய ஐந்து நிறமும்: அடிநிலையில் பொன், அதற்கு மேல் வெள்ளி, செம்பு, ஈயம், இரும்பு போன்ற ஐந்து உலோகத் தாதுக்களும் மறைந்து கிடக்கப் பொருந்த அமைத்தருளுவது அருட்பெருஞ்ஜோதி.

**மண்ணினில் ஐம்பூ வகுத்துஅதில் ஐந்திறம்**
**அண்உற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 372**

மண்ணுலகில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்து வகை நிலங்களைப் படைத்து, அவை ஐந்திலும் தனித்தனியான தன்மை, வகை, இயல்பு, முறை, ஒழுக்கம் ஆகிய நிலைகளை அவற்றுக்குப் பொருந்த அமைத்துள்ளது அருட்பெருஞ்ஜோதி)

**மண்ணினில் நாற்றம் வகுத்துஅதில் பல்வகை**
**அண்உறப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி. 374**

மண்ணின் குணமாக மணத்தை




அமைத்து, அதில் பலவகை உயிர்கள் பொருந்தி அனுபவித்து வாழ அமைத்தருளியது அருட்பெருஞ்ஜோதி.

**மண்ணினில் பற்பல வகைகரு நிலைஇயல்**
**அண்உறப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி 376**

மண்ணுலகில் பல வகையான உயிர் வகைகள், ஆண், பெண் இனச்சேர்க்கையால் தோன்றி வளரச்செய்து, அவை பூமியை ஆதாரமாகக் கொண்டு பொருந்தி வாழ அமைத்தருளியது அருட்பெருஞ் ஜோதி.

**மண்ணினில் ஐந்துஇயல் வகுத்துஅதில் பல்பயன்**
**அண்உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 378**

மண்ணாகிய பூதத்துக்கு திண்மை, நெகிழ்தல், வெம்மை, வலிமை, கலத்தல் ஆகிய ஐந்து வகைத் தன்மைகளையும்; மணம், சுவை, தோற்றம், ஊறு, ஓசை ஆகிய ஐந்து இயல்புகளையும் உண்டாக்கி, அதில் பயன்படும் ஆற்றல்கள் பலவற்றைப் பொருந்த அமைத்துள்ளது அருட்பெருஞ் ஜோதி.

**மண்இடை அடிநிலை வகுத்துஅதில் பல்நிலை**
**அண்உற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 380**

இம் மண்ணுலகை உள் இடமாகக் கொண்டு அதில் மணல், ஆறு, எரிமலை போன்ற பலவகை நிலைகளைப் பூமிக்குள் பொருந்தியிருக்கும்படி அமைத்தருளியது அருட்பெருஞ்ஜோதி.

## வள்ளலார் உபதேசங்கள்

**இரவில் உறங்கும் போது எந்த காலத்தில் எது குறித்து படுத்த போதிலும் இடது கைப்பக்கமாகவே படுத்தல் வேண்டும்.**

**இதனால் மறுநாள் காலை உடற்கழிவுகள் அனைத்தும் முற்றிலும் வெளியேறும்.**

# செய்யப்பட்ட பாவங்களும், செய்ய வேண்டிய வள்ளலார் சொன்ன பரிகாரங்களும்

செய்யப்பட்ட பாவங்களை வள்ளல் பெருமான் 2–வகையாக பிரிக்கிறார். 1–தெரியாமல் செய்த பாவங்கள். 2–தெரிந்தே செய்த பாவங்கள்.

தெரியாமல் செய்த பாவங்கள் எது என்றால் நடக்கும் போதும், குளிக்கும் போதும், உறங்கும் போதும், நமக்கு தெரியாமல் ஏற்படும் பாவச் செயலாகும். இது மட்டுமல்லாமல் மனதிற்கு புலப்படாமல் உண்டாகும் பாவங்கள் அனைத்தும் தெரியாமல் செய்த பாவங்கள் ஆகும் என்கிறார் வள்ளல் பெருமான். இப்படி தெரியாமல் செய்த பாவங்களும் நமக்கு அதற்குரிய தண்டனையை தரவல்லது. இந்த பாவங்களில் இருந்து விடுபட என்ன செய்ய வேண்டும் என்றால், தினந்தோறும் செய்யும் ஜெபம், பாராயணம், தோத்திரம், விருந்து உபசரிப்பு, இறை சிந்தனை ஆகியவற்றால் இந்த பாவங்களில் இருந்து விடுபெறலாம் என்கிறார் வள்ளல் பெருமான்.

நம் இல்லம் தேடி வருபவர்களுக்கு இன்முகத்தோடு உபசரிப்பது, நாம் தெரியாமல் செய்த பாவங்களை போக்குகின்றது. அப்படி உபசரிக்கும் போது கொடுக்கப்படும் உணவானது நல்ல சாத்விகமான உணவாக இருக்க வேண்டும். அசைவ உணவை உண்பது உபசரிப்பது போன்றவை மேலும் பல பாவ வினைகளையே சேர்க்கும்.

தெரிந்தே செய்த பாவங்கள் என்னவென்றால் ஆசையாலும், மோகத்தாலும், மறதியாலும், அகங்காரத்தாலும், செல்வச் செருக்காலும், உறவாலும், உணவாலும், புகழாலும், வழக்கத்தாலும் செய்யப்படும் பாவச்செயலே ஆகும்.

இந்த பாவங்களில் இருந்து விடுபெற என்ன செய்ய வேண்டும் என்றால், பாவம் செய்ததை எந்த வகையிலாவது தெரிந்து கொண்ட பின்பு அதற்காக இரக்கப்பட்டு தேகத்தை தவத்தாலும், விரதத்தாலும், விலக்கச் செய்ய வேண்டும்.

மேலும் உயிர்களுக்கு உதவும் நோக்கத்தில் புண்ணியத் தலங்களுக்கு யாத்திரைச் சென்று முடிந்த அளவிற்கு அன்னதானம் செய்தால் செய்யப்பட்ட பாவங்கள் நீங்கும் என்கிறார் வள்ளல் பெருமான்.

தவம்–என்பது ஒழுக்கமான வாழ்வு. உணவு–என்பது ஒழுக்கமான உணவு முறை. யாத்திரை–என்பது இறை சிந்தனையோடு பயணித்தல். அப்படி புண்ணியத் தளங்களுக்கு செல்லும் பொழுது, ஜீவ உபகார நிமித்தமாய் செல்லுதல் வேண்டும் என்கிறார் வள்ளல் பெருமான். ஜீவ உபகார நிமித்தமாய் செல்லுதல் என்பது, உயிர்களுக்கு உதவும் நோக்கத்தில் செல்லுவது ஆகும்.

இந்த பிராய்ச்சித்தங்களை செய்ய சக்தி அற்றவர்களாகவும், முதியோர்களாகவும் இருப்பவர்கள் மகான்களுக்கு தொண்டு செய்து வந்தால் பாவங்கள் நீங்கும். மகான்கள் கிடைக்கவில்லை என்றால், இரக்க உணர்வோடு பாவகாரியங்களை செய்யாமலும், பாவிகளுடைய கூட்டத்தில் பழகாமலும் திருவருளை சிந்தித்துக் கொண்டு அவர்கள் தரத்திற்கு ஒத்த தெய்வங்களை சிந்தித்து கொண்டிருந்தால் செய்த பாவவினைகள் நீங்கும் என்கிறார் வள்ளல் பெருமான்.

கொல்லாமை புலால் உண்ணாமையை கடைபிடித்து இரக்க உணர்வோடு பசித்தவர்களுக்கு பசிஆற்றுவிப்பதையே விரதமாக அனுசரிப்பவர்களின் பாவ வினைகள் நீங்கி புண்ணியம் பெருகி வாழ்வு சிரக்கும் என்பது வள்ளலார் அருள் வாக்கு.

## அருள் எவ்வகையில் வரும்

உயிர்கள் இடத்தில் தயவும், பிரபஞ் சத்தில் வெறுப்பும், கடவுள் இடத்தில் அன்பும் இருந்தால் அருள் நம்மை வந்தடையும். நமக்கு கடவுள் அருள் எப்போது காரியப்படும் என்றால், நமக்கு பொது உணர்வு வந்த உடனே கடவுள் அருள் காரியப்படும் என்கிறார் வள்ளலார். பொது உணர்வு என்பது எல்லா உயிரையும் தன் உயிராக எண்ணுவது தான் பொது உணர்வு.

## அன்பு

இந்த உலகம்
அன்பு மயமானது. ஆகவே
எல்லா உயிர்களிடத்திலும்
அன்பாக இருக்க வேண்டும்

அன்பு என்பது உயிரின் இயல்பு

ஆடு, மாடு, கோழி, பன்றி, மீன், நண்டு, நத்தை போன்ற உயிரினங்களிடம் நாம் ஏன் அன்பு செலுத்த வேண்டும். பரிவு செலுத்த வேண்டும். அவர்களை சகோத ரர்களாக நினைக்க வேண்டும் என்றால் ஜீவர்களெல்லாம் ஒரு தன்மையாகிய சர்வ சக்தியை உடைய கடவுளால் சிருஷ்டிக்கப் பட்ட படியால் ஒரு உரிமை உள்ள சகோதரர்களே ஆவார் என்கிறார்.

------- வள்ளலார்.

## சிதம்பர இராமலிங்கம் வள்ளலார்



- ★இவர் இறைவனால் வருவிக்க வுற்றவர்
- ★ உலகுயிர்கள் அனைத்தும் ஒளிநெறி பெற்றிட இறைவனால் வருவிக்கஉற்றவர்
- ★ இறைவனின் அருளாட்சியை இப்புவியில் மலர வைக்க வந்த வர்
- ★ ஜீவகாருண்யத்தை கற்று தர வந்தவர்
- ★ இவரிடம் நாம் அன்பையும், தயவையும், ஜீவகாருண்யத்தை யும் கற்று மரணமில்லா பெரு வாழ்வை அருட்பெருஞ்ஜோதிய ரின் அருளால் பெறலாம்.

## சன்மார்க்க சாதனம்

காலம் தாழ்த்தாது எல்லா உயிரையும் தன் உயிர் போல் பார்க்கும் உணர்வை வருவித்துக் கொள்ளுதல் வேண்டும். இதுவே சாதனம்.

இந்த குணம் வந்தவன் எவனோ அவன் தான் இறந்தவரை எழுப்புகின்றவன் அவனே ஆண்டவனும் ஆவான்.

----- வள்ளலார்.

# கெட்ட எண்ணம் உள்ளவர்களை இறை அருள் என்ன செய்யும்?

## –ஒரு குட்டிக்கதை

**வா**லிபன் ஒருவன் இறைவன் மீது அவ்வளவு நம்பிக்கை இல்லாமல் இருந்தான். இறைவனைப் பற்றியும், அதை சார்ந்து அவன் கேட்கும் எந்த கேள்விகளுக்கும் அந்த ஊரில் உள்ளவர்கள் பதில் சொல்ல முடியாமல் திணறினார்கள். அப்போது அந்த ஊருக்கு மகான் ஒருவர் வந்திருந்தார். பலரும் அவரை தரிசித்து அருளை பெற்று சென்றனர். சிலரோ இவனிடம் வந்து எங்களிடம் அடிக்கடி கேள்வி கேட்பாயே, உன் கேள்விக்கு அந்த மகான் பதில் தருவார் சென்று பார் என்று கூற, அந்த வாலிபனும் அந்த மகானை நேரில் சென்று சந்தித்தான். அங்கு சென்றவன் எதையும் கேட்காமல் அவரையே வெகு நேரமாகப் பார்த்துக் கொண்டே இருந்தான். இதைக் கவனித்த மகான், ஏனப்பா உனக்கு என்ன குறை? எதற்காக என்னை சந்திக்க வந்தாய் என்று கேட்டார்.

அதற்கு அதுவரை அமைதியாக இருந்தவன் சாமி எனக்கு ஒரு சந்தேகம், உங்களைப் போன்ற பல மகான்களும், பெரியோர்களும் வந்து மனித குலத்திற்கு பல அறிவுரைகள் சொல்லி இருக்கிறார்கள். ஆனால், இன்றும் மனிதன் தீய வழியில் தான் செல்கின்றான், உங்களை போன்றவர்களின் அறிவுரைகளால் என்ன நன்மை? தேவையில்லாத நேர விரயம் தானே? என்று கேட்டான்.



அதற்கு மகான் அவனிடம், தம்பி நான் இன்னும் சில நாட்கள் இங்கே தான் தங்கியிருப்பேன். நான் ஊரை விட்டு செல்லும்போது நீ கேட்ட கேள்விக்கு பதில் சொல்கிறேன், அதற்கு முன் நீ ஒரு வேலை எனக்காக செய்ய வேண்டும், செய்வாயா என்று கேட்டார். சொல்லுங்கள் ஐயா, என்ன செய்ய வேண்டும் என்று அந்த வாலிபன் கேட்க, ஒரு கழுதயைக் கொண்டு வந்து இந்தக் கோயில் மண்டபத்தில் கட்டி வை. நான் ஊரை விட்டுச் செல்லும் வரை கழுதை அங்கேயே கட்டி இருக்கட்டும். தினமும் மூன்று வேளையும் அதற்கு உணவு வை என்று சொல்லிவிட்டு அருகில் உள்ள சத்திரத்திற்கு சென்றார். மறுநாள் காலை மகான் அந்த கோவில் மண்டபத்துக்கு வந்தார்.

அப்பொழுது அந்த வாலிபன் அந்த கழுதையை சுற்றி இருந்த சாணத்தையும், அது மிச்சம் வைத்த உணவுக் குப்பைகளையும், சுத்தப்படுத்திக் கொண்டு இருந்தான். இவ்வாறு தொடர்ந்து நான்கு நாட்கள் நடந்தன. அடுத்த நாள் காலை சுத்தப்படுத்

திக் கொண்டிருந்த வாலிபனின் அருகில் வந்த மகான், தம்பி நீ தினமும் இந்த இடத்தை சுத்தப்படுத்தினாலும், கழுதை மீண்டும் மீண்டும் அசுத்தம் செய்து விடுகின்றதே, பிறகு ஏன் தேவையில்லா மல் இந்த இடத்தை மீண்டும் மீண்டும் சுத்தம் செய்கின்றாய் என்று கேட்டார். அதற்கு அவன் என்ன சாமி எல்லாம் தெரிந்த நீங்களே இப்படிக் கேட்கிறீர் கள்? திரும்பத் திரும்ப அசுத்தம் செய்வது என்பதற்காக இந்த இடத்தை சுத்தப் படுத்தாமல் இருக்க முடியுமா? என்று கேட்டான். இதைக் கேட்ட மகான் அப்போது சொன்னார் தம்பி, அன்று நீ கேட்ட கேள்விக்கு இதுதான் பதில். நீ இப்போது செய்யும் வேலையைத்தான் நான் செய்து வருகிறேன். அசுத்தமான இடத்தை நீ மீண்டும் மீண்டும் சுத்தம் செய்வது போல மனிதனை நல்வழிப்படுத் தும் செயலை எங்களைப் போன்ற பெரி யோர்கள் இடைவிடாமல் செய்து வருகி றோம். என்று மகான் கூற வாலிபனோ சாமி இதற்கு நிரந்தரத் தீர்வு தான் என்ன? என்று கேட்டான். அவர் உடனே அங்கு கட்டி இருந்த கழுதையை அவிழ்த்து அங்கிருந்து விரட்டினார். பின்பு அந்த வாலிபனை பார்த்து இனி இந்த இடம் அசுத்தமாகுமா என்று கேட்டார். ஆகாது சாமி என்று கூறினான் அந்த வாலிபன்.

மகான் இப்படிக் கூறினார் உன்னுடைய கேள்விக்கு இதுதான் பதில். நீ செய்த வேலையைப் போல் நாங்கள் மீண்டும் மீண்டும் சுத்தப்படுத்திக் கொண்டு இருக் கிறோம். இப்பொழுது நான் செய்த வேலையைப் போல் என்று மனிதன் தன் னிடம் இருக்கும் தீய எண்ணம் என்ற கழுதையை வாழ்வில் இருந்து விரட்டி விடுகிறானோ, அப்பொழுதே எங்களின் சுத்தப்படுத்தும் கடமை முடிந்துவிடும். அதுவரை மனிதனை நன்னெறி படுத் துவது ஆன்மீகத்தின் கடமை என்றார். அதுவரை அவன் மனதிற்குள் குடியி ருந்த ஆணவம் என்ற கழுதை கொஞ்சம் கொஞ்சமாகத் தன் மனதை விட்டு வெளி யேறுவதை உணர ஆரம்பித்தான்.

## எல்லா துன்பத்திற்கும் காரணம்...

சிலர் பிறக்கும்போதே நல்ல வசதியான குடும்பத்தில் பிறந்து சகல வசதிக ளோடு அனைத்து இன்பத்தையும் அனுபவித்து வாழ்கிறார்கள்.

இன்னும் சிலரோ பிறக்கும் போதே துயரத்தோடு பிறக்கிறார்கள். அது மட் டுமல்லாது முடமாகவோ, உடல் ஊனமுற்றோ பிறந்து பல்வேறு துன்பங்களை அனுபவித்து வாழ்க்கையை வாழ்கிறார்கள். இவர்கள் இருவரையும் படைத்தது கடவுள்தான் என்றால், ஒருவரை மட்டும் ஏன் ஊனத்தோடும், மற்றொருவரை எல்லா இன்பங்களையும் அனுபவிக்குமாறு படைக்க வேண்டும்? ஏன் இந்த ஏற்றத்தாழ்வு என்ற கேள்வி நம்முள் எழும். தூய்மையும், நேர்மையும், பெரும் கருணையும் கொண்டவரான கடவுள் ஒருவரை இன்பத்திலும், மற்றவரை துயரத் திலும் ஆழ்த்துகிறார் என்றால் அவர் நிச்சயமாக கடவுளாக இருக்க முடியாது. எனவே நம் இன்பத்திற்கும் நாம் அனுபவிக்க கூடிய எல்லா வகையான துன் பத்திற்கும் காரணங்கள் நாம் இந்த மண்ணில் பிறப்பதற்கு முன்னே இருந்தி ருக்க வேண்டுமே அல்லாது இறைவனால் உண்டாக்கப்பட்டது அல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அந்தக் காரணங்கள் தான் நம்முடைய கர்மவினை கள் என்பதை ஒவ்வொருவரும் உணரவும் வேண்டும்.

# இறைவனை எப்படி முழுமையாக நம்ப வேண்டும்?



ஒரு சிட்டுக்குருவி கூட்டில் தன் குஞ்சுகளை விட்டுவிட்டு இரை தேட புறப்பட்டது. கண்களை மூடி கடவுளை நோக்கி பிரார்த்தனை செய்தது. கடவுளே! எனக்கும் என் குஞ்சுகளுக்கும் இரை தேடப் புறப்படுகிறேன். எனக்கு எந்த தீங்கும் ஏற்படக்கூடாது, அதைப்போலவே என் குஞ்சுகளுக்கும் எந்த ஆபத்தும் வராமல் பார்த்துக் கொள் என்று வேண்டியது. அந்த மரத்தில் கீழ் ஒரு முனிவர் அமர்ந்திருந்தார். சிட்டுக்குருவியின் வேண்டுதல் அவரின் காதுகளில் விழுந்தது. சிட்டுக்குருவியை அந்த முனிவர் தன் அருகில் அழைத்தார்.

சிட்டுக்குருவியே! நீ செல்லும் இடங்களில் உனக்கு தீங்கு ஏற்படாமல் இருப்பதற்கு நான் ஒரு உபாயம் சொல்கிறேன். இதோ இந்த குடத்தில் நீல நிற சாயம் இருக்கிறது. இதில் சிறிதளவு எடுத்து உன் வாலில் பூசிக்கொள். பிறகு யாரும் உன்னைத் தொந்தரவு செய்ய மாட்டார்கள். ஏனென்றால், இந்த நீல நிற சாயம் இறைவனின் பாதுகாப்பில் உள்ளவர்களுக்காக கொடுக்கப்பட்டது என்று அனைவருக்கும் தெரியும்.

மற்றொரு விஷயம், நீ மழையில் நனைந்தால் இந்த நிறம் கறைந்து விடும். உடனடியாக இந்த குடத்திலிருந்து நிறத்தை மீண்டும் பூசிக்கொள், என்று சொல்லி அந்தக் குடத்தை மரத்தடியில் வைத்தார். குருவிக்கு எல்லையில்லா மகிழ்ச்சி! தன் வாலை குடத்துக்குள் நுழைத்து வாலை நீல நிறமாக மாற்றிக்கொண்டு தைரியமாக இறை தேடப் புறப்பட்டது. இந்த விஷயம் காடு முழுவதும் பரவியது. ஒவ்வொரு முறை மழை பெய்யும் போது வாலின் நீல நிறம் கரைந்து போனது. உடனடியாக மரத்தடிக்குச் சென்று தன்னுடைய வாலில் நிறத்தைப் பூசி கொண்டது.



தற்போது அதற்கு எதிரிகளின் பயம் இல்லை. தன்னைக் காப்பாற்றிய முனிவருக்கும், கடவுளுக்கும் நன்றி சொல்லி, பிரார்த்தனையில் மகிழ்ந்து கடவுள் சட்டென்று அதன் முன் தோன்றினார். குருவியே! உன்னுடைய பிரார்த்தனையில் மகிழ்ந்து போனேன். உனக்கு என்ன வர வேண்டும் என்று கேட்டார் கடவுள்.

கடவுளே! ஒவ்வொரு முறையும் நிறத்தை பூசி கொள்கிறேன். பிறகு அது மழை வந்தாலோ, நீரில் பட்டாலோ கரைந்து விடுகிறது.

ஆகையால், வாலில் நீல நிறம் நிரந்தரமாக



இருக்கும் வகையில் வரம் கொடுங்கள் என்றது குருவி. குருவி கேட்ட வரத்தை கடவுள் கொடுத்துவிட்டு மறைந்தார். நடந்த நிகழ்வுகளை முனிவரும், அவரது சீடரும் பார்த்துக் கொண்டிருந்தனர். சீடன் முனிவரிடம் இப்படி கேட்டான்.

இறைவனிடம் கேட்பதற்கு ஆயிரம் வரங்கள் இருக்கும் போது நீல நிறத்தை வரமாக கேட்டிருக்கிறதே இந்த முட்டாள் பறவை! என்னை யாரும் வெல்ல முடியாத பலசாலியாக மாற்றுங்கள், எனக்கு மரணமே நிகழக் கூடாது, எனக்கு உணவு பஞ்சமே வரக்கூடாது, நான் இந்த காட்டின் அரசனாக வேண்டும், என்று ஏதாவது ஒரு பெரிய வரத்தை கேட்டிருக் கலாமே, என்று புலம்பினான் சீடன்.

அதற்கு முனிவர் சீடனிடம் இப்படி பதில் கூறினார். சீடனே! உண்மையை உனக்கு சொல்கிறேன். நீல நிறத்திற்கும் கடவுளுக்கும் எந்த தொடர்பும் இல்லை. நீல நிறம் காப்பாற்றும் என்று நான் சொன்னது பொய். நீல நிறம் தன்னை காப்பாற்றும் என்று குருவியும், குருவியை தொந்தரவு செய்தால் கடவுள் நம்மைத் தண்டிப்பார் என்று, அதன் எதிரிகளும் நம்பினர். இந்த நம்பிக்கை குருவிக்கு தைரியத்தையும், எதிரிகளுக்கு பயத்தை யும் கொடுத்தது.

இதனால் குருவி மகிழ்ச்சியோடு தன் நாட்களை கழிக்கின்றது. இது குருவியின் நம்பிக்கைக்கு கிடைத்த வெற்றி. கடவுள் கொடுத்த வரம், குருவின் யதார்த்த தேவைக்கு கிடைத்த வெற்றி என்று சொல்லிவிட்டு முனைவர் அங்கிருந்து சென்றார். சீடன் சிந்திக்கத் தொடங்கி னான்.

இந்த கதையில் நாம் படித்த நம் பிக்கைதான் ஆன்மிகம். நம்மால் தீர்க்க முடிந்த பிரச்சினைகளைக் கூட கடவுள் தான் தீர்க்க வேண்டும் என்று அவரை பிரார்த்தனை செய்து கொண்டே இருப் பது தான் முட்டாள்தனம். ஆனால் நியா யமான நமது செயல்களை அவர் நிச்ச யம் அங்கீகரிப்பார்.

முயற்சி இல்லாத இறை நம்பிக்கை யும், இறை நம்பிக்கை இல்லாத முயற்சி யும் வீண்தான். இறை நம்பிக்கை என்பது நம்மை நல்வழியில் நடத்த வேண்டுமே தவிர மூடநம்பிக்கையில் மூழ்கடித்து விடக்கூடாது.



## சத்திய ஞானசபை

**ஆன்மா ஒளியாக உள்ளது, இறைவனும் ஒளியாக உள்ளார்.**

**ஆன்ம ஒளியும், இறை ஒளியும் ஒன்று சேர்வதே முக்தி**

**ஒளிக்கடவுளான உண்மை கடவுளை வெளிக்காட்டவே சத்திய ஞான சபையை வள்ளலார் கட்டிக் காண்பித்தார்.**

# அருள்ஜோதி அன்ன ஆலய சேவாதாரிகள்



திரு.இரவிசந்திரன் ஐயா



திரு.முத்துராஜ் ஐயா



திரு.ஐயப்பன் ஐயா



திரு. வெங்கட்ராமன் ஐயா



திரு.ஜெகதீசன் ஐயா



திரு. ப.ஐயப்பன் ஐயா



திருமதி. சந்தானலட்சுமி அம்மா



செல்வி.ஜெயஸ்ரீ

**மேற்கண்ட படங்களில் உள்ளவர்கள் நமது அன்ன ஆலய சேவாதாரிகள், மற்றவர்கள் அன்ன ஆலயப் பெயரை உபயோகப்படுத்தினால் கீழ்கண்ட தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

# 90030 34056

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க

# அருள்ஜோதி கல்வி அறக்கட்டளை




**எண்: 1 மதுரைசாமி மடம் குறுக்குத்தெரு,**
**செம்பியம், பெரம்பூர், சென்னை–600011**

தொலைபேசி: 9003034056, 9600024878

இணையதளம்: www.aruljothitrust.com மின்னஞ்சல்: aruljothipadasalai@gmail.com


அருள்ஜோதி

## நீங்களும் கல்வித்தொண்டு செய்யலாம்!

அன்புடையீர், வணக்கம்! வாழ்த்துக்கள்!! தாங்களும் தாங்கள் செய்யும் தொழிலும் தொண்டும் மேன்மேலும் சிறந்து விளங்க போற்றி வாழ்த்துகிறோம்.

பொன்னேரி தாலுக்காவில் கடல் சூழ்ந்த லைட்ஹவுஸ் குப்பம் உள்ளது. அவ்விடத்தில் மேற்படி அறக்கட்டளையின்கீழ் அருள்ஜோதி குருகுலப் பாடசாலை என்ற பெயரில் எங்கள் பள்ளி நடைபெறுகிறது. இப்பள்ளியில் எல்.கே.ஜி முதல் 5–ஆம் வகுப்பு வரை ஆங்கில வழி கல்வி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. அரசு அங்கீகாரம் பெற்ற (பதிவெண் 24/239–2005) இப்பள்ளியில் 350 பிள்ளைகள் கல்வி பயின்று வருகின்றனர். அறக்கட்டளையின் சார்பாக இப்பள்ளியில் பயிலும் பிள்ளைகளுக்குச் சீருடையும் பாடப் புத்தகங்களும் வழங்கப்படுகின்றன. இந்தப் புண்ணியத் தொண்டில் தாங்களும் பங்கேற்கலாம். இன்னும் சில ஆண்டுகளில் இப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் உயர்கல்வி பெற்று வாழ்வில் உயர்வடைவதுடன், வள்ளலார் போதனைகளையும் மற்றும் ஆன்மிக கல்வியும் பெறுவதனால் ஒழுக்க நெறியுடன் உத்தம சீலர்களாகவும் திகழ்ந்து வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்ப்பர் என்பது திண்ணம்.



| அன்ன தர்மம் விவரம்: | |
|---|---|
| காலை உணவு........................................... | ரூ.2000/– |
| மதிய உணவு ........................................... | ரூ.5000/– |
| **மதிய சிறப்பு உணவு** | |
| (வடை, பாயாசம் உட்பட)............................ | ரூ.8000/– |

இங்ஙனம்

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க
என்று எண்ணும்
**தவத்திருமதி. தனலட்சுமி அம்மையார்,**
தலைவர்

காணிக்கைகள் **ARULJOTHI EDUCATIONAL TRUST** என்ற பெயருக்கு செக்காகவோ, டி.டி.யாகவோ அனுப்பலாம். பெறப்படும் காணிக்கைகளுக்கு வருமானவரி சட்டம் 80 ஜி பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.

அருளாளர் பதிவு படிவம்

பெயர்:

முகவரி: பதிவெண்: ________



# அருள்ஜோதி அன்ன ஆலயத்தில் அரு
# சிறப்பிக்கின்ற நிகழ்வானது 7.1







நட்சேவை புரிகின்ற சேவாதாரிகளை
11.2023 அன்று நடைபெற்றது.



## சத்குரு

# நம்மை நாமே திருத்திக் கொள்வது

ஒரு மனிதனின் குணம் சிறிதளவு மாறுவதுகூடக் கடினமாக உள்ளது. ஏனென்றால், மனநிலையில் மாற்றம் ஏற்படுவது என்பது மிகக் கடினமான விஷயமாகும். நிறைய மாற்றங்கள் மனம் ஏற்றுக்கொள்ள மறுப்பதால் தடுக்கப்படுவதில்லை; ஆனால், அகங்காரத்தால் தடுக்கப்படுகிறது. அவன் மாற வேண்டும் என்று விரும்பினால் தன்னை மாற்றிக்கொள்ள முடியும். ஆனால், மாற வேண்டும் என்ற விருப்பம் ஸ்திரமாக எல்லாச் சமயங்களிலும் அவனுள் ஆழ்ந்து இருக்க வேண்டும்.

***சீடன்:* ஒரு சத் சங்கத்தில் கொள்கைகள் இருப்பது அவசியமா?**

குரு: மனிதன் இறந்தாலும் அவன் கொள்கைகள் அழிவதில்லை. சத் சங்கமாயிருந்தாலும், தனி நபராயிருந்தாலும் கொள்கை இருப்பது மிக்க அவசியம்.

***சீடன்: சில கொள்கைகளைப் பின்பற்றுவதில் பிடிவாதமாய் இருப்பது தவறா?***

குரு: நீ சுதந்தரமாக இருக்கிறாய் என்ற உணர்வு உனக்கு இருந்தால்தான், உன்னால் எல்லா விஷயங்களையும் நேரான முறையில் பார்க்க இயலும். ஆனால், 'பிடிவாதம்' என்ற குணம், விஷயங்களை நேரான முறையில் பார்ப்பதைக் கடினமாக்கிவிடுகிறது. அதனால், நான் உனக்கு இந்தக் குணத்தை எவ்வாறு கையாள்வது என்று ஒரு மேன்மையான முறையைக் கூறுகிறேன். பிடிவாதத்தை ஒரு நொடியில் முற்றிலும் எரித்துவிடுவதோ, கழற்றி எறிவதோ சுலபமான காரியமில்லை. அதனால் அதை நன்முறையில் பயன்படுத்தக் கற்றுக்கொள். உண்மையைப் பின்பற்றுவதில் பிடிவாதமாக இரு. இதுதான் 'மாற்றம்' அதனால்தான் இறை தூதர்கள், 'அவன் நல்லவன்; இவன் தீயவன்', என்று கூறுவதில்லை. மனிதர்களில் 'மாறியவன்', 'மாறாதவன்' என்று இரு வகைதான் உண்டு. மாறுவது என்றால் என்ன? ஒரு விஷயத்தை நம்பி அதற்கேற்றாற்போல் மாறுவதா? இல்லை! ஒரு மதத்திலிருந்து மற்றொரு மதத்திற்கு மாறுவதா? இல்லவே இல்லை! யாரெல்லாம் தங்கள் குணக்கேடுகளை உண்மைக்குப் பணியச்செய்து குணநலன்களாக மாற்றுகிறார்களோ அவர்கள்தாம் 'மாறியவர்கள்' என்று அழைக்கப்படுகின்றனர். இது எல்லா மனிதனுக்கும் பொருந்தும். மணிக்கணக்காகத் தியானம் செய்யும் யோகியானாலும் சரி, தெருவில் நடக்கும் சராசரி மனிதனாக இருந்தாலும் சரி, அல்லது அழகான குழந்தையாக இருந்தாலும் சரி, 'மாற்றம்' என்பது எல்லோருக்கும் ஒரே விதந்தான்.

உன்னுள் தீய குணங்கள் சேராமல் பார்த்துக்கொள்வதில் பிடிவாதமாய் இரு. சாத்தானின் தீய செயல்களுக்கு இரையாகாமல் இருப்பதில் பிடிவாதமாய் இரு. எப்படிக் கடவுள் மறைமுகமாக இருக்கிறாரோ அப்படியே சாத்தானும் மறைமுகமாக இருக்கிறது. அதனால்தான் பிரச்சினை உண்டாகிறது. உன்னுடைய எல்லா விதமான அகங்காரத்தையும் மாற்றி நல்வழியில் பயன்படுத்து. "நான் முன்னைவிட மேம்பட்டுவிட்டேன்" என்று எண்ணக் கூடாது. "நான் இன்னும் மாற வேண்டும்" என்ற பிரார்த்தனை நம்முள் இருக்க வேண்டும். மனத்தில் வெளிவட்டம் உள்ளது. உன் அகங்கா

ரத்தை அங்கே வை. துவாரபாலகர்கள் வாசற்கதவின் அருகில்தான் இருப்பார்கள். கர்ப்பகிரஹத்தில் கடவுளைத்தவிர வேறு யாரும் இல்லை. அது போல், உன்னுடைய அகங்காரத்தை மனத்தின் வெளி வட்டத்தில் வைப்பாயானால் உன்னுள் தேவையற்ற, விரும்பத்தகாத குணங்கள் நுழைய சாத்தியமில்லை. நாம் நம்முடைய ஒவ்வொரு குணக்கேட்டையும் ஆராய்ந்து, அதை மாற்றி நல்ல விதமாகப் பயன்படுத்திக் குண நலனாக்க வேண்டும். அகங்காரத்தைச் சுலபமாய் மாற்றிக்கொள்ளலாம். அது வெளிப்படையான தன்மையாகும். ஆக, இத்தகைய வழிமுறைகளைப் பயன்படுத்தினால் நாம் முன்னேறலாம்.

**சீடன்: நாம் எந்தக் குணக்கேடுகளையெல்லாம் தவிர்க்க வேண்டும்?**

குரு: எவையெல்லாம் உன் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளனவோ அவற்றையெல்லாம் தவிர்க்க வேண்டும். எடுத்ததற்கெல்லாம் அழ வேண்டும் என்ற இயல்பு உனக்கிருந்தால் அதைத் தவிர்க்க வேண்டியதில்லை; அதை மாற்றிக்கொள். பிறருக்காக அழு. கடவுளின் பெயரைக் கேட்டால் அழு. உன் அழுகைக்கு உன்னால் இவ்வாறு அழகு சேர்க்க முடியவில்லை என்றால் அப்போது அதைத் தவிர்த்துவிடு. இரண்டு குணங்களை எடுத்துக்கொள்வோம். ஒன்று, சிரிப்பது; மற்றொன்று, கேலி செய்வது. சிரிப்பில் வெறுப்பு நுழைந்தால் அது கேலியாக மாறிவிடும். சிரித்து சந்தோஷமாக இருப்பது குணப்படுத்தும், விரிவுபடுத்தும், ஏன் உன்னை உயர்த்தவும் செய்யும். ஆனால், உன் சிரிப்பில் வெறுப்பு கலக்குமானால், அது கேலியாகிப் பிறரைத் துன்புறுத்தும். பிறரை வெறுப்பினால் கேலி செய்வது உன் வளர்ச்சியைத் தடை செய்யும். வெறுப்பைத் தவிர்த்தாயானால் சிரிப்பும் வேடிக்கையுந்தான்.

ஒழுக்கத்தினிடையே பிடிவாதம் நுழைந்தால் அதனால் ஒரு விதமான இறுக்கம் ஏற்பட வாய்ப்பு உண்டு. நீ தினந்தோறும் தியானப் பயிற்சி செய்ய வேண்டும். நீ பயிற்சி செய்யாமல் இருப்பதற்கு எந்த விதமான காரணமும் கூறக்கூடாது. ஆனால், அதே சமயத்தில் உன்னால் தவிர்க்க முடியாத காரணங்களால் தியானப் பயிற்சி செய்ய முடியவில்லையென்றால் அதற்காக நீ உன் தலையைச் சுவரில் மோதிக்கொள்ளக்கூடாது.

நான் உன்னை ரோஜா மலர் கொண்டுவரச் சொன்னேன் என்றால், நீ உடனே தோட்டத்திலோ அல்லது கடை வீதியிலோ சென்று தேடுவாய். அப்படி முயற்சி செய்தும் உனக்கு ரோஜா மலர் கிடைகக்வில்லை என்றால் அதற்காக வருந்தவும் கூடாது. ஒரு ரோஜாவை உண்டாக்குவது உன்னுடைய சக்திக்கு உட்பட்டதல்ல. அதனால் பிடிவாதம் என்ற குணம் அகங்காரத்தின் தூரத்து உறவாகும். அதனால் அதைத் தவிர்க்க வேண்டும்.


**சீடன்: தன்னம்பிக்கையை எவ்வாறு உருவாக்க முடியும்?**

குரு: அகங்காரம் ஒழிந்தால் நம்பிக்கை உண்டாகும். என்னால் இதைச் செய்ய முடியும், அதைச் செய்ய முடியும், என்று கூறித் திரிவது நம்பிக்கை ஆகாது. உண்மையில் ஒருவனுக்கு நம்பிக்கை உண்டாவது அவன் தன் ஆத்மாவைப்பற்றி அறிந்து கொண்ட பிறகுதான். ஆத்மாவைப் பற்றி எவ்வாறு அறிந்துகொள்வது? நீ ஆத்மா இன்றி வேறு எதுவும் இல்லை என்று முதலில் அறிந்துகொள். உன்னுடைய புலன்களை வசப்படுத்தினால்தான் உன்னுடைய ஆத்மாவை அறிந்துகொள்ள முடியும். முதலில் அகங்காரத்தை விட வேண்டும். அகங்காரத்தை ஒழித்தால் தான் அடக்கம் வரும்.

**சீடன்: நம்முடைய வாசனைகளால் தான் அகங்காரம் உண்டாகிறதா?**

குரு: நீ எதை விதைத்தாயோ, அதை அறுவடை செய்வாய். உழவன் முதலில்

மண்ணைப் பரிசோதிப்பான். நெற்பயிர் வளர வேண்டிய இடத்தில் தாமரை வளரமுடியாது. முதலில் அந்த நிலத்தில் தேவையற்ற பயிர்களையெல்லாம் ஒழிக்க வேண்டும். பூச்செடிகள் இருந்தாலும் அவற்றையும் களைய வேண்டும். நிலத்தில் நெற்பயிரை விளைவிக்க விரும்பினால் அங்கு மல்லிகைக் கொடியை அனுமதிக்கக்கூடாது. அதனால் உழவன் புல்லென்றும், பூவென்றும் பார்க்காமல் நன்றாக உழுவான். இதில் எந்தச் சுருக்கு வழியும் கிடையாது.



அகங்காரம் என்றால் என்ன? உண்மையைக் காண மறுப்பதே அகங்காரம். உழவன் நிலத்தை உழுதுவிட்டு எல்லாம், கடவுள் பார்த்துக் கொள்வார் என்று சும்மாயிருந்தால் அவனுக்கு என்ன கிடைக்கும்? ஒரே ஒரு நாள் மட்டும் உழுவதால் பலன் கிடைக்காது. ஒரு வேலையை எடுத்துக்கொண்டால் அதை முழுமையாகச் செய்ய வேண்டும். அது போல், நாம் எப்பொழுதும் அகங்காரத்தைத் தவிர்த்து ஒரே மாதிரியாக அன்பாகவும் அடக்கமாகவும் இருக்க வேண்டும்.

**சீடன்: ஆரம்பத்தில் எப்பொழுதும் அடக்கமாக இருப்பது சாத்தியம் இல்லை அல்லவா?**

குரு: நீ அடக்கமாக இருக்க வேண்டும் என்ற அவசியத்தை எந்நேரமும் உனக்கு நீயே நினைவுபடுத்திக்கொண்டு, அதற்கு முயற்சி எடுத்துக் கொண்டால் அது சாத்தியமாகும். விஸ்வாமித்திர மஹரிஷியைப் போல் உயர்ந்த போர் வீரர் யாருமில்லை. அதே சமயத்தில், அவரைப் போல் பணிவும் அடக்கமுமான மனிதனும் வேறு ஒருவருமில்லை. அவர் மிக அடக்கத்துடன் பிரார்த்தனை செய்தார். அவர் மீது வரங்கள் பொழிந்த போது அவர் அதை

மரியாதையுடனும், அடக்கத்துடனும் இறைவனின் ஆசியாக ஏற்றுகொண்டார். தான் எப்பொழுதும் அடக்கத்துடன் இருந்தால் தான் இறைவன் ஆசி நிலைத்து நிற்கும் என்று அவர் உணர்ந்தார். அவர் பிரம்ம ரிஷியானது அவரது வல்லமையினால் அல்ல, அடக்கத்தினால்தான். விஸ்வாமித்திரைப் போல் நீ கடும் தவம் செய்தும், கடும் சோதனைகளைச் சந்தித்தும் சாதனை புரிய வேண்டியதில்லை. உனக்கு எல்லா விஷயங்களும் ஆசீர்வதிக்கப்பட்டுச் சுலபமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும், அடக்கமாக இருப்பதற்கு உனக்கு மிகக் கடினமாக உள்ளது என்றால் அது மாயையால் தான்.

**சீடன்: அடக்கமாய் இருப்பதாலேயே ஒருவன் உயர்ந்துவிடுவானா?**

குரு: அடக்கத்துடன் இருக்க வேண்டியது மிக அவசியமும் முக்கியமுமான ஒன்று என்று ஒருவன் உணர்ந்துவிட்டால் பிறகு மற்றவையெல்லாம் சுலபமாகக் கைகூடும். அவன் மேன்மேலும் உயர்வடைவான். அடக்கத்துடன் இருக்க வேண்டிய அவசியத்தை, அகங்காரத்துடன் ஆடும் மனிதன் உணராத போது அவன் அகங்காரம் அடங்கும்படியான சூழ்நிலை உண்டாகிறது. அகங்காரம் அடிபட்டதும், அந்த அதிர்ச்சியில் அடக்

கத்துடன் இருக்க வேண்டிய அவசியம் அவனுக்குப் புரிகிறது. அதனால் நன்மை ஏற்படுகிறது. இவ்வுலகில் பலர் தவறு செய்து, பிறகு அதை உணர்ந்து, தங்களைத் திருத்திக் கொண்டு மேன்மை அடைந்திருக்கிறார்கள்.

***சீடன்: அடக்கத்தை எப்படி நம்மிடம் தக்க வைத்துக்கொள்வது?***

குரு: ஒரு குழந்தையைப் போல் உள்ளம் இருந்தால் அடக்கம் இருக்கும். அடக்கம் வெளியிலிருந்து வருவதில்லை, அது நம்முள்தான் இருக்கிறது. அதைக் கண்டு கொள்வது மிகக் கடினம். நீ எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருந்தால் உன் உள்ளம் குழந்தையின் உள்ளம் போல் தூய்மையாய் இருக்கும். அதை உன்னுள் தக்க வைத்துக் கொள்ளலாம். மகிழ்ச்சியாக இருப்பவன் பிறரையும் மகிழ்விப்பான்.

***சீடன்: சில சமயங்களில் நான் அமைதியை இழந்து சிக்கிக்கொண்டு விடுகிறேன். இதை எவ்வாறு சமாளிப்பது?***

குரு: நீயே ஒரு தாயாகி உன்னுள் குழப்பத்தில் அழும் குழந்தையைச் சமாளிக்க வேண்டும்.

***சீடன்: என் உள்ளத்தை ஒரு குழந்தையின் உள்ளத்தைப் போல் எப்படி வைத்துக்கொள்வது?***

குரு: தனிப்பட்ட முறையிலான ஈடுபாடுகளைத் தவிர்த்தால் உன் உள்ளம் குழந்தையின் உள்ளம் போலாகிவிடும். இந்த உலகத்தில், ஏன் அதற்கு அப்பாற்பட்ட லோகங்களிலுங்கூட யாருக்கும் எந்த விதமான தீங்கும் நீ இழைக்காமல் இருப்பது உறுதியானால், அப்பொழுது உன் உள்ளம் ஒரு குழந்தையின் உள்ளம் போல் பரிசுத்தமாகிவிடும். உன்னைக் கத்தியால் தாக்க வந்தவனைக்கூடச் சந்தேகிக்காமல், அவனிடம் புன்னகை புரிய முடிந்தால் உன் உள்ளம் குழந்தையின் உள்ளமாக இருக்கும்.

உள்ளத்தில் குழந்தையாக இரு. ஆனால், அதற்காகப் பொறுப்பில்லாதவனாய் விளையாட்டுத்தனத்தை மேலோங்க விடாதே. உன்னுடைய கடமைகளில் சற்றும் கவனம் குறையாமல் பொறுப்புடன் இரு. இவ்வாறு நாம் எளிமையாக இருந்து, ஆன்மிக வழியில் மேலும் மேலும் முன்னேற வேண்டும்.

## தேகமெலிவு, ஈளை, சுக்கிலக்கெடுதி, வள்ளல் பெருமான் கூறிய மூலிகைக் குறிப்பு

**தேவையான பொருள்:- கரிசலாங்கண்ணி, பொன்னாங்கண்ணி, மிளகு, சீரகம், பசு நெய்.**

**செய்முறை:- பொன்னாங்கண்ணி 1 பங்கு (100கி), கரிசலாங்கண்ணி கால் பங்கு (25கி). இந்த இரண்டு வகையான கீரைகளையும் நன்றாக சுத்தம் செய்து, ஒரு மண் சட்டியில் சிறிது நீர் ஊற்றி வேக வைக்கவும். கீரைகள் மூழ்கும் அளவிற்கு நீர் ஊற்றினால் போதுமானது. ஒரு வாணலில் சிறிது பசு நெய் ஊற்றி, சிறிது சீரகம் சேர்த்து வடித்த கீரையை சேர்த்து வதக்கவும். ஒரு நிமிடம் வதக்கினாலே போதுமானது. பின்பு அதில் மிளகு, சீரகப்பொடி சேர்க்கவும் உப்பு சேர்க்க தேவையில்லை. காலை, மதியம் மட்டுமே இந்தக் கீரையை உடலுக்கு எடுத்துக் கொள்ளலாம். இரவு நேரத்தில் எடுத்துக்கொள்ளக்கூடாது. இதை வடித்த சாதத்தில் சேர்த்துச் சாப்பிடலாம். இது உடல் இளைத்தவர்கள், சத்து இல்லாமல் இருப்பவர்கள், இடுப்பு வலி, மூட்டு வலி, மூச்சு வாங்குதல் இப்படிப்பட்ட பலவீனமானவர்களுக்கு ஒரு நல்ல அருமருந்தாக வள்ளல் பெருமானார் குறிப்பிடுகின்றார்.**

# சாப்பிடும் பொழுது புத்தகம் படிக்கக்கூடாது

சிலர் புத்தகம் படித்துக்கொண்டே சாப்பிடுவார்கள். இவர்களுக்கு ஜீரணம் ஒழுங்காக ஆகாது. ஏனென்றால், நாம் புத்தகம் படிக்கும்பொழுது நமது கண், மூளை, எண்ணம், மனம் அனைத்தும் புத்தகத்தில் நாம் படிக்கும் விஷயங்களிலேயே இருக்கும். அப்பொழுது நமது மனம் ஜீரண சுரப்பிகளைச் சுரக்க வைப்பதற்குக் கட்டளையிடாது.

சிலர் புத்தகத்தைப் படித்துக் கொண்டு சாப்பிடும் பொழுது திடீரென உணவைப் பார்த்து எங்கே இட்லியைக் காணோம் என்று கேட்பார்கள். அந்த அளவுக்கு நாம் எவ்வளவு சாப்பிட்டோம், எப்படிச் சாப்பிட்டோம் உதட்டை மூடிச் சாப்பிட்டோமா, சாப்பிடும்பொழுது தண்ணீர் குடித்தோமா என்று ஒன்றுமே தெரியாது.

இப்படிப் புத்தகம் படித்துக்கொண்டு சாப்பிடுபவர்கள் அனைவருக்கும் எல்லா வித நோய்களும் வரும். எனவே தயவு செய்து சாப்பிடும்பொழுது புத்தகம் படிக்காதீர்கள்.

# சாப்பிடும்பொழுது பேசக்கூடாது

சாப்பிடும்பொழுது நம்மில் பலர் பேசிக்கொண்டே சாப்பிடுகிறோம். இப்படிச் சாப்பிடும்பொழுது பேசுவதால் அந்தச் சாப்பாடு சரியாக ஜீரணமாகாமல் தரம் கரைந்த சர்க்கரை, தரம் குறைந்த கொழுப்பு போன்ற பொருள்களை உருவாக்குகிறது. சாப்பிடும்பொழுது பேசினால் என்ன தவறு என்று கேட்டால் பேசுவதற்காக வாயைத் திறக்கும்பொழுது வாய்க்குள் காற்று நுழைந்துவிடுகிறது. உணவு இரண்டும் ஒன்று சேர்ந்து ஜீரண வேலையைச் செய்து கொண்டிருக்கும்பொழுது காற்று உள்ளே செல்வதால் ஜீரண வேலை கெடுகிறது.

வாயில் நடக்கும் ஜீரணத்திற்குக் காற்று எதிரி. சாப்பிடும்பொழுது உதட்டை மூடி மெல்லவேண்டும் என்று ஏற்கனவே பார்த்தோம். சாப்பிடும்பொழுது நாம் பேசினாலும் அந்த விதிமுறையை நாம் கடைப்பிடிக்க முடியாது.

மேலும், நாம் பொதுவாக சாப்பிடும்பொழுது என்ன விஷயம் பேசுகிறோம், குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகள், வியாபாரத்தில் ஏற்படும் பிரச்சினைகள் கோபம், வருத்தம், டென்ஷன், பயம் போன்ற தேவையில்லாத விஷயங்களைப் பற்றித்தான் அதிகமாகப் பேசுகிறோம். இப்படிச் சாப்பிடும்பொழுது தேவையில்லாத செய்திகளை யோசிக்கும்பொழுது நமது உடலில் சில வேதியியல் மாற்றங்கள் ஏற்பட்டு ஜீரண வேலை தடைபடுகிறது.



# சாப்பிடும்பொழுது செல்போனில் பேசக்கூடாது



*சாப்பிடும்பொழுது நம்மில் பலர் செல்போனில் பேசிக் கொண்டே சாப்பிடுகிறாம். இது ஜீரணத்தை மிகவும் கெடுக்கும் ஒரு கெட்ட பழக்கமாகும். ஏனென்றால் நாம் செல்போனில் எந்த செய்தியைப் பேசிக் கொண்டிருக்கிறோமோ நமது கவனம், எண்ணம் முழுவதும் மனம் முழுவதும் அந்தச் செய்தியைப் பற்றி மட்டுமே யோசித்துக் கொண்டிருக்கும். இந்த நேரத்தில் நமது உடலில் ஜீரண சுரப்பிகள் எதுவுமே சுரக்காது. அப்பொழுது சாப்பாடு மலமாகவோ அல்லது நஞ்சாகவோ மாறுகிறது. தவிர இரத்ததில், நல்ல தாது உப்புகளாகவும் மாறுவது கிடையாது. சாப்பிடும்பொழுது செல்போன் பேசிக்கொண்டு சாப்பிடுபவர்கள் அனைவருக்கும் பல நோய்கள் கண்டிப்பாக இருக்கும். இதற்கு எந்த மருந்து மாத்திரைகள் எடுத்துக் கொண்டாலும் அவர்களைக் குணப்படுத்த முடியாது.*

*எனவே, தயவுசெய்து சாப்பிடும்பொழுது செல்போனில் பேசாதீர்கள். ஒரு 5 நிமிடத்திற்கு சைலன்டிலோ அல்லது சுவிச் ஆப்போ செய்து விட்டுச் சாப்பிடுங்கள். இப்படிச் சாப்பிடும் |பொழுது செல்போனில் பேசாமல் சாப்பிடுவதால் நமது உணவு நன்றாக ஜீரணமாகி பல நோய்களைக் குணப்படுத்தும் மருந்தாகவும் மாறுகிறது.*

## சிற்றின்பம்

★ நான் இந்த உடல் என எண்ணினால் சிற்றின்பம்

★படைப்பினால் ஈர்க்கப்பட்டால் சிற்றின்பம்

★படைப்புகளை அனுபவித்தால் சிற்றின்பம்

★என்னால்தான் இந்த வாழ்க்கை எனில் சிற்றின்பம்

★அமைதி ஆனந்தம் சிறிது பெற்றபின் இழந்தால் சிற்றின்பம்

★செய்வதெல்லாம் தனக்காக என்றால் சிற்றின்பம்

★செய்வது நான் என எண்ணினால் சிற்றின்பம்

★புறப்பொருள்களால் ஈர்க்கப்பட்டு சுகம் அடைவது சிற்றின்பம்

★இன்பத்தை அடைந்தாலும் திருப்தி அடையாதது சிற்றின்பம்

## பேரின்பம்

★நான் இந்த உயிர் என எண்ணினால் பேரின்பம்

★இறைவனால் ஈர்கப்பட்டால் பேரின்பம்

★படைப்புகளை ஆராதித்தால் பேரின்பம்

★இறைவனால் தான் இந்த வாழ்க்கை எனில் பேரின்பம்

★அமைதி ஆனந்தத்தை நித்தியமாக பெற்றால் பேரின்பம்

★செய்வதெல்லாம் இறைவனுக்காக என்றால் பேரின்பம்

★செய்வது இறைவன் என எண்ணினால் பேரின்பம்

★அகத்திலேயே நித்திய சுகம் பெறுவது பேரின்பம்

★எதையும் விரும்பும் போது பரிபூரணமாக உணர்வது பேரின்பம்

# வள்ளலார் உவமையாக சொன்ன உயர்ந்த ஞானக்கதை

இந்த உண்மையை உணர்ந்தால் உலகம் எல்லாம் சகோதரத்துவத்தோடு ஒற்றுமையாக வாழும்:–

எல்லோரும் ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமையை கடைப்பிடிப்பார்கள்

இது மிகப் பழமையான கதை. இதனை வள்ளல் பெருமான் மேற்கோளாக எடுத்துக் கூறுகிறார்.

இந்தக் கதையில் உள்ள உண்மையை உணர்ந்தால் மட்டுமே இறைவனை அடைய முடியும்.

ஒரு ஊரில் பிறவிலேயே பார்வையற்றவர்கள் ஐந்து பேர் இருந்தார்கள். அவர்கள் யானை எப்படி இருக்கும் என தொட்டுப் பார்க்க விரும்பினார்கள். அவர்களின் முன்பு யானை நிறுத்தப்படுகிறது. ஐவரும் ஆளுக்கொறு பக்கமாக சென்று யானையை தொட்டுப் பார்க்கிறார்கள். ஒருவர் யானையின் தும்பிக்கையை தொட்டுப் பார்த்து, யானை பெரிய உலக்கை போல் இருக்கும் என்கிறார். மற்றொருவர் யானையின் காதை தொட்டுப் பார்த்து யானை பெரிய முறம் போல் இருக்கும் என்கிறார். 3வது நபர் யானையின் வயிற்றைத் தொட்டு பார்த்து யானை பெரிய பானை போன்றது என்கிறார். 4வது நபர் யானையின் காலைத் தொட்டுப்பார்த்து யானை பெரிய உரல் போல் இருக்கும் என்கிறார். 5–வது நபர் யானையின் வாலைத்தொட்டு பார்த்து, யானை ஒரு துடைப்பம் போல் இருக்கும் என்கிறார்.



தான் தொட்டுப் பார்த்ததே சரி என்கிற பற்றும், பிடிவாதமும் மற்றவர்களுக்கிடையே உள்ள உண்மையை உணர மறுத்தது. இந்தப் பிடிவாதம் இல்லாமல் உண்மை எது என்று ஆராய்ந்திருந்தால் அவர்களுக்கு உண்மை கிடைத்திருக்கும்.

ஐவர் சொல்வதும் சரியாக தோன்றலாம், ஆனால் உண்மை வேறொன்றாக இருக்கிறது. இப்படித்தான் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சமய மதத்தின் மீது பற்று வைத்துவிட்டு, பிறகு கடவுளைத் தேடுகிறோம். இந்தப் பற்றை எல்லாம் விட்டுவிட்டு கடவுளை அறிந்து கொள்ள விரும்பினால் மட்டுமே கடவுளை பற்ற முடியும்.

எனவே தான் ஞானிகள், மகான்கள் கடவுளைப் பற்றிய உண்மை உணர்ந்து எல்லா பற்றுதலையும் விட்டால் தான் கடவுளை அடைய முடியும் என்கிறர்கள். வள்ளல் பெருமான் இறைவனிடம் விண்ணப்பிக்கும் போது ஜாதி, சமய, மத ஆச்சார சங்கற்ப விதர்ப்பங்கள் எங்கள் மனதில் பற்றா வண்ணம் அருள் செய்தல் வேண்டும் என்பார்.

ஏனென்றால் ஜாதி, சமய, மத ஆச்சாரங்கள் விருப்போ, வெறுப்போ தோன்றினால் அது மனிதர்களுக்கிடையே பாகுபாட்டை உண்டாக்கி தயவைத் தடை செய்கிறது. தயவு இல்லாமல் போனால் இறைவனை அடையவே முடியாது. சிறு தீக்குச்சியைக் கொண்டு பெரிய ஜோதியை ஏற்றுவது போல் நம்முடைய சிறு கருணையைக் கொண்டு ஆண்டவரின் பெரிய கருணையாகிய அருளைப்

பெற முடியும். மற்ற எந்த வகையிலும் பெற முடியாது என்கிறார் வள்ளல் பெருமான்.

ஆண்மக்கள், பெண்மக்கள் முதலிய யாவர்களிடத்திலும் ஜாதி, மதம், சமயம், ஆஸ்ரமம், சூத்திரம், கோத்திரம், குலம், சாஸ்திர சம்பந்தம், உயர்ந்தோர், தாழ்ந் தோர் என்னும் பாகுபாடின்றி எல்லா வர்களையும் தம்மவர்களாய் சமத்தில் கொள்ள வேண்டும் என்கிறார் வள்ளல் பெருமான். ஐவரும் தாம் தொட்டு பார்த் தது, யானையின் ஒவ்வொரு பாகங்கள் மட்டும்தான். ஆனால் நாம் நினைப் பதை விட யானை பெரியது என்று உணர்ந்து, அதனை முழுமையாக அறிய வேண்டும் என்று எண்ணி இருந்தால் யானை எப்படி இருக்கும் என்று உணர்ந் திருப்பார்கள். ஆனால் தாம் தொட்டுப் பார்த்த பாகங்களே சரி என்றும், மற்றவர் கள் கூறுவதை தவறு என்றும், ஒவ்வொ ருவரும் விவாதித்து உண்மையை உணர முடியாமல் போய்விட்டது.

இறைவன் பேரொளியாய், பெருஞ் ஜோதியாய், இருக்கிறான் ஆனால் அவன் எண்ணியவர் எண்ணியபடி எல்லாம் காட்சியளிக்கிறார். நாம் கடவுளை 1000 கை உடையவர் என்று எண்ணி அவர் மீது அன்பு செலுத்தினால், அந்த பெருங்க ருணை உடையவர். அப்படியே நம் மீது அன்பு செலுத்தி அருள் புரிகிறார். ஆனால் அது தான் அவருடைய உண்மை உருவம் என்று எண்ணி, இறைவனின் உருவத்தைக் கண்டேன் என்பது பார்வையற்றவர்கள் யானையின் பாகங்களைக் கண்டது போல் தான். வள்ளல் பெருமான் பாடுகிறார் எவ்வுலகில் எவ்வவர்க்கும் அருட்பெருஞ் ஜோதியரே இறைவன் என்பது அறியாது இம்மதவாதிகள் தாம் அவ்வைப் பெறும் குருடர் கதி கண்ட கதைப்போல கதைக் கின்றனர்.

## ஓவியங்கள்:

**5 முதல் 15 வரை உள்ள மாணவ–மாணவிகளிடமிருந்து தனக்குப் பிடித்த சைவ பிராணிகள் என்ற தலைப்பில் ஓவியங்கள் வரவேற்க்கப்படுகின்றன.**

## இளைஞர் கட்டுரைகள்

சன்மார்க்க அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் இளைஞர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு. தங்களின் சன்மார்க்க கட்டுரைகள், மற்றும் கவிதைகள் அருள்ஜோதி மாத இதழ் புத்தகத்தில் புகைப் படத்துடன் பிரசுரிக்கப்படும்.

**குறிப்பு:**

**நமது அருள்ஜோதி அன்ன ஆலயத்தில் தொண்டு புரிந்து கொண்டிருக்கின்ற தாங்களும், தங்களின் அனுபவத்தை நமது இல்லத்திற்கு வருகின்ற சேவதாரிகளிடம் தாங்கள் தொண்டு புரிந்து கொண்டிருக்கின்ற அனுபவத்தை பகிர்ந்து கொண்டு பதிவு செய்வதன் மூலமாகத் தங்களின் அனுபவமானது அருள்ஜோதி புத்தகத்தில் வெளியிடப்படும்.**

# அருள்ஜோதி அன்ன ஆலயத்திற்கு அன்ன தர்ம காணிக்கை வழங்கும் கருணை உள்ளங்களின் அனுபவங்கள்

நாங்கள் அண்ணாநகர் பகுதியில் 7 ஆண்டு காலமாக வசித்து வருகிறோம். எனது பெயர் அருண் ராஜ் மனைவியின் பெயர் ஐஸ்வர்யலட்சுமி.

உணவு தேவைப்படும் நபர்களை நாங்கள் சந்திக்க முடியாத சூழ்நிலையில், அருள்ஜோதி அன்ன ஆலயம் சிறப்பாகத்தொண்டு பணியை செய்து வருகிறது. நாங்கள் நன்றாக அதனுடைய பலனை உணர்கிறோம். மற்றவர்களை மகிழ்விப்பதை விட சிறந்த உணர்வு எதுவும் இல்லை. தர்மத்திற்காக காணிக்க வழங்குவது மனதிற்கு உயர்வை தருவது மட்டுமின்றி எங்களது உடல் ஆரோக்கியத்திலும் நல்ல மாற்றத்தை ஏற்படுத்துகிறது. நாங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை ஒரு தேவையுள்ள நபருக்கு நன்கொடையாக வழங்கும்போது மனம் ஆனந்தம் அடைகிறது. மற்றவர்களுக்கு உதவி செய்யும் நல்ல நல்ல எண்ணங்களும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. நமது வாழ்க்கை என்பது மன அழுத்தத்தால் நிறைந்தது. அதைக்குறைக்க மக்கள் பல முயற்சிகளைச் செய்கிறார்கள். அதையெல்லாம் தவிர்த்து சிறிது நேரம் வேறு ஒருவருக்கு நல்லது செய்ய வேண்டும் என்று ஒருவர் மீது கவனம் செலுத்துவது மன அழுத்தத்தைக் குறைக்க ஒரு சிறந்த வழியாகும்.

# அருள் ஜோதி புத்தகம் வாசிக்கும் அன்பர்களின் அனுபவங்கள்

எனது பெயர் சரோஜா அம்மாள் நான் அண்ணா நகர் பகுதியில் வசிக்கின்றேன்.

அருள் ஜோதி புத்தகத்தை மாதம் ஒருமுறை வாசிப்பதால் இன்பத்தைத் தாண்டிய பலனை அனுபவித்து தெரிந்து கொள்ள முடிகின்றது. எனது அலமாரி முழுவதும் அருள்ஜோதி புத்தகத்தை அடுக்கி வைத்துள்ளேன். வள்ளல் பெருமானைப்பற்றி மேலும் கூடுதலாக தெரிந்து கொள்ள அருள்ஜோதி புத்தகம் உதவிகரமாக உள்ளது. உடலுக்கு உடற்பயிற்சி செய்வது எவ்வளவு நன்மை அளிக்கின்றதோ, அதே போல் மனதிற்கு அருள்ஜோதி புத்தகம் வாசிப்பது நல்ல சிந்தனைகளை மனதுக்குள் ஏற்படுத்துகிறது.



# வள்ளலாரின் புத்தகங்கள்

| | |
|---|---|
| 1.HOW SOUL BECOMES LIGHT | - ரூ.120 |
| 2.சத்திய ஞானசபைத்தத்துவ விளக்கம் | - ரூ.80 |
| 3. THE JOURNEY | - ரூ.50 |
| 4.திருவருட்பிரகாச வள்ளலார் வாழ்வில் நடந்த அற்புதங்கள் | - ரூ.20 |
| 5. வள்ளலார் வரலாறு (வினா-விடை) | - ரூ.30 |
| 6. திருவருட்பிரகாச வள்ளலார் அருளிய உபதேசங்கள் | - ரூ.10 |
| 7. திவ்ய ஒளி | - ரூ.50 |
| 8. அருட்குறள் | - ரூ.50 |
| 9. ஐந்தாம் திருமுறை | - ரூ.200 |
| 10. ஆறாம் திருமுறை | - ரூ.150 |
| 11. சாகாநிலை சத்திய வாழ்வு | - ரூ.50 |
| 12. சுத்த சன்மார்க்கம் வினா-விடை | - ரூ.30 |
| 13. நாளந்தாதி | - ரூ.40 |
| 14. அகவல் பாராயணத்திரட்டு (சிறியது) | - ரூ.15 |
| 15. அகவல் பாராயணத்திரட்டு (பெரியது) | - ரூ.30 |

# மூலிகை மருந்துகள்

| | |
|---|---|
| 1. கூட்டுசூரணம் (50கி) | - ரூ.60 |
| 2.கரிசாலை (50கி) | - ரூ.60 |
| 3.திரிபலா (50 கி) | - ரூ.60 |
| 4. முடவட்டான் கால்சூப் (50 கி) | - ரூ.100 |
| 5.மூச்சுடர் கரிசாலைத்தைலம் 200 (எம்.எல்.) | - ரூ.300 |
| 6. அகத்தியர் கருவப்பட்டை பற்பொடி (80 கி) | - ரூ.45 |
| 7.கரிசாலைக் கண் மருந்து | - ரூ.70 |
| 8.மூலிகைத்தைலம் | - ரூ.40 |

# எது ஜீவ காருண்யம்?

**ஜீவ காருண்ய ஒழுக்கமே மரணமிலாப் பெருவாழ்வைத் தரும் மார்க்கம்.**

★ பசி என்கிற நெருப்பானது ஏகதேகத்தினுள் பற்றி எரிகின்ற போது ஆகாரத்தால் அணைக்கின்றது தான் ஜீவ காருண்யம்.

★ பசி என்கிற விஷக்காற்றானது ஏழைகள் அறிவாகிய இலக்கை, அவிக்கின்ற தருணத்தில் ஆகாரம் கொடுத்து அவியாமல் ஏற்றுகின்றதே ஜீவாருண்யம்.

★ கடவுள் இயற்கையை விளக்கத்திற்கு இடமாகிய ஜீவ தேகங்கள் என்கிற ஆலயங்கள் பசியினால் பாழாகும் தருணத்தில் ஆகாரம் கொடுத்து அவ்வாலையங்களை விளக்கம் செய்விப்பதே ஜீவாகாருண்யம்.

★ கடவுள் இன்பத்தைப் பெருகின்ற நிமித்தம் தேகங்களில் இருந்து குடித்தனம் செய்கின்ற ஜீவரது தத்துவக் குடும்பம் முழுவதும் பசியினால் நிலை தடுமாறி அழியும் தருணத்தில் ஆகாரம் கொடுத்து அக்குடும்பம் முழுவதும் நிலைபெறச் செய்வதே ஜீவகாருண்யம்.

★ பசி என்கிற புலினாது ஏழை உயிர்களைப் பாய்ந்து கொல்லத் தொடங்கும் தருணத்தில் அப்புலியை கொன்று உயிரை இரட்சிப்பதே ஜீவகாருண்யம்.

★ பசி என்கிற விஷம் தலைக்கேறி ஜீவன் மயங்கும் தருணத்தில் அவர் தேள் விஷத்தை இறக்கி மயக்கம் தெளிய வைப்பதே ஜீவாருண்யம்.

★ பசி என்கிற கொடுமையாகிய தேள் வயிற்றில் புகுந்து கொட்டுகின்ற போது, கடுப்பேறி கலங்குகின்ற ஏழைகளுக்கு ஆகாரத்தால் கடுப்பை மாற்றி கலக்கத்தைத் தீர்ப்பதே ஜீவகாருண்யம். நேற்று இராப்பகல் முழுவதும் நம்மை கொன்று தின்ற பசி என்கிற பாவி இன்றும் வருமே இதற்கு என்ன செய்வோம் என்று ஏக்கம் கொள்கின்ற ஏழை ஜீவர்களது ஏக்கத்தை நீக்குவது தான் ஜீவகாருண்யம்.

★ வெயிலேறி போகின்றதே இனி பசி என்கிற வேதனை வந்து சம்பவிக்குமே இந்த விதிவசத்திற்கு என்ன செய்வது என்று தேனில் விழுந்த ஈயைப் போல திகைக்கின்ற ஏழை ஜீவர்களுடைய திகைப்பை நீக்குவதுதான் ஜீவகாருண்யம்.

★ இருட்டி போகின்றதே இனி ஆகாரம் குறித்து எங்கே போவோம் என்ன செய்வோம் என்ற விசாரத்தில் அழுந்திய ஏழை ஜீவர்களது விசாரத்தை மாற்றுவதே ஜீவகாருண்யம்.

★ நடந்து நடந்து காலும் சோர்ந்தது. கேட்டுக் கேட்டு வாயும் சோர்ந்தது. நினைத்து நினைத்து மனமும் சோர்ந்தது. இனி பாவி வயிற்றிற்கு என்ன செய்வோம் என்று கண்ணீர் வடிக்கின்ற ஏழைகளுக்கு ஆகாரம் கொடுத்து கண்ணீரை மாற்றுவதே ஜீவகாருண்யம்.

★ சன்மார்க்க ஒழுக்கத்திற்கு ஒத்த தத்துவ ஆகாரத்தால் பசி நிவர்த்தி செய்து கொள்ள தக்க மிருகம் பறவை, ஊர்வன, தாவரம் என்கிற உயிர்களுக்கு பசி வந்த போது பசியை நிவர்த்தி செய்விப்பதே ஜீவகாருண்யம்.

★ பசியை நிவர்த்தி செய்து கொள்ளத் தக்க புவன போக சுதந்திரங்களை பெறுவதற்குரிய அறிவு இருந்தும், பூர்வ கருமத்தாலும், அஜாக்கிரதையாலும், அச்சுதந்திரத்தை பெற்றுக் கொள்ளாமல் பசியினால் வருந்துகின்ற ஜீவர்களுக்கு ஆகாரம் கொடுத்து அந்த பசி வருத்தத்தை நீக்கி, திருப்தி இன்பத்தை உண்டு பண்ணுவதற்கு காரணமாகிய ஜீவகாருண்யம் என்கின்ற திறவுகோலை கொண்டு தான் மோட்சம் ஆகிய மேல் வீட்டுக் கதவு திறந்து கொண்டு உள்ளே புகுந்து எக்காலத்தும் அழியாத இன்பத்தை அனுபவித்து வாழ வேண்டும்.

அன்புடையீர் வணக்கம்!

நமது அருள்ஜோதி அன்ன ஆலயத்தில் மாதந் தோறும் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை அன்று தய வுத்திரு. கோடீஸ்வரன் ஐயா அவர்களின் சிறப்பு சொற்பொழிவு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அனைவரும் வருகை தந்து வள்ளல் பெருமானா ரின் அருளைப் பெற வேண்டுகின்றோம்!

**தலைப்பு : ஒழுவில் ஒடுக்கம்**

**நேரம் : காலை 10:30 மணிக்கு**



## அருள்ஜோதி அன்ன ஆலயம்

**எண்.33/ 17, கென்னடி சதுக்கம் ,திரு.வி.க. நகர் , பெரம்பூர் , சென்னை 600011. தொடர்புக்கு 90030 34056**

# பசி, கொலை, பிணி, ஆபத்து, தாகம், பயம், இன்மை, இச்சை விளக்கம்

ஆதாரம்:– திருஅருட்பா ஜீவகாருண் யம் இரண்டாம் பகுதி

**பசி என்பது:–** ஆகாரம் பெறாமை யால் வயிற்றுனுட் பற்றி நின்று தேகத் தின் அகத்தும், புறத்தும் உள்ள கருவி காரணங்களின் தன்மைகளைச் சுடுதல் செய்து அறிவை மெலிவித்து ஆன்மாவை வெளிப்படுத்துவதற்கு முதற்காரணமா கிய விகற்ப மாயக்காரியப் பிண்டப் பகுதி நெருப்பு.

**கொலை என்பது:–** தேகத்தின் அகத்தும் புறத்தும் உள்ள கருவி கரணங்களைப் பல்வேறு கருவி காரணப் படைப்பயிற்சி களால் புதைப்புண்டாக கலங்கஞ்செய்து அறிவை மெலிவித்து ஆன்மாவை வெளிப்படுத்துவதற்கு நிமித்தமாகிய விகற்ப பூதகாரியத் கொடுந்தொழில்.

**பிணி என்பது:–** வாத பித்த சிலேட்டும விகற்பங்களால் மாறுபட்டு, தேகத் தின் அகத்தும், புறத்தும் உள்ள கருவி கரணங்களை நலிவு செய்து அறிவை மெலிவித்து ஆன்மாவை வெளிப்படுத்து வதற்கு நிமித்தமாக நின்ற விகற்ப மாயக் காரியப் பிண்டப் பகுதி வேற்றுமை உணர்வு.

**ஆபத்து:–** ஆபத்து என்பது அகங்காரத் தாலும், மறதியாலும் கரும, வேறுபாட் டாலும் தேகபோக அனுபவங்களைத் தடுக்கின்ற விக்கினங்கள்.

**பயம்:–** பயம் என்பது தேக முதலி கார ணங்களுக்கு நட்டஞ் செய்வதாகிய விடயங்கள் நேரிட்ட போது கார ணங்களுக்கும் அறிவுக்கும் உண்டாகின்ற நடுக்கம்.

**இன்மை:–** இன்மை என்பது, கல்வி செல்வம் முதலிய கருவிகளைத் தற்சுதந் திரத்திற் பெறாமை.

**இச்சை:–** இச்சை என்பது அடையக் கருதிய விடயங்களில் அருமை குறித்து அவற்றை மேன்மேலும் கருதச் செய்கின்ற சித்தவிருத்தி என்றுஅறிய வேண்டும்.

சீகாழி.கண்ணுடைய வள்ளல் அருளிச் செய்த

# ஒழிவில் ஒடுக்கம்

திருப்போரூர் சிதம்பரசுவாமிகள் உரையிலிருந்து வினா–விடையாகத்
தொகுத்தவர். ஜோதி.வீ.கோட்டீஸ்வரன், காஞ்சிபுரம்.

**தன்னை யறியாது வேறுண்டாய்த் தானறியா(து)**
**உன்னில்ஒழி வாம் உதிப்பீர் என்றுமிலைச்–சந்திக்கே**
**அஞ்சு தொழி லாம்அதனை ஆனந்த வாக்காலே**
**கிஞ்சளவு கேட்கலும் ஆகும்.**

*சிவத்தின் பரிபூரண நிலையும் அவர் செய்யும் ஐந்தொழிலின் சிறப்பும் கூறுக?*

சிவம் மலரகிதமாய் இருத்தலின் அது தன்னை அறியாது; மற்றொரு பொருளைத்தான் அறிந்துகொண்டு இருக்குமோ எனின் தனது பூரணத்தில் சகலமும் அடங்கியிருக்கும் ஆகலின் தனக்கு வேறாய் ஓர் பொருளுண்டாய் அதனை அறியாது; நினைவோடுதான் இருக்குமோ எனின், நினைப்பு உண்டெனின் மறப்பும் உண்டு. ஆகலின் அது நினைப்பும் மறப்பும் இன்றிய நிருவிகாரி; அதுதான் ஓர் காலத்து உண்டாயதோ எனின், உற்பத்தி உண்டெனின் நாசமும் உண்டு. அஃது அநாதி; நித்தியம் ஆதலின் உற்பத்தி நாசம் ஒன்றும் இல்லாதது.

அச்சிவத்தின் கண்ணே ஐந்தொழில் உளவாம். ஆன்மாக்கன் இடத்தில் வைத்த காருண்யத்தால் மௌனாநந்தந் ததும்பி அது கூறும் ஆனந்த வாக்கால் சிறிதளவு கேட்கலும் ஆகும்.

உதாரணமாக, சூரிய பிரகாசத்தில் ஒன்று அரும்புதலும், ஒன்று மலருதலும், ஒன்று உலர்தலும் ஆகிய முத்தொழில் படல் போல், சிவசந்நிதானத்தில் மாயை சிருட்டியாகி, தோன்றி, நின்று அழியும்




என முத்தொழில் உண்டாகும் என்ப.

**உதியா(து) உளதாகி ஓங்கிப்பே ராமல்**
**அதிசுக்ககுமங் குறைந்து ஆகாமல்–பதையாத**
**ஆகாயமுங் காலும் போல அசைவற்றதே**
**தேகாண் பரிபூரணம்.**

உலகம், உயிர், சிவம் இம்மூன்றும்

ஒன்றாய் இருப்பது எப்படி?

தநு கரண புவன போகங்களை மாயையில் தோற்றுவிப்பதும், ஆன்மாக் களை அவற்றில் கூட்டுவிப்பதும் சிவம யமே அதற்கு மேல் மற்றொன்று இன்மை யாயினும்; போக்குவரவு அற்றதாயும், யாவைக்கும் ஆதாரமாகவும், உள்ளும் புறம்புமாய் இருந்தும், ஒன்றோடும் தாக் கற்று இருந்தலினும், என்றும் குறையாத தாயும் இருக்கின்றது எதுவோ அதுவே பரம்பொருள் ஆகும்.

ஆகாயமும் வாயுவும் பிரிபடாது இருந்தாலும், வாயுவினிடத்து குளிர்ச்சி, வெப்ப முதலியவற்றையும் பிரித்துக் காணப்படும். அவற்றின் நடுநின்ற வாயு அந்த ஆகாயத்தில் அசைவற நிற்பின் முன்தோன்றிய பகுப்புகளின்றி அவ்வா காயம் தானாகயிருக்கும். அதுபோல,

பெத்த காலத்தில் முப்பொருட்கட் கும் நடுநின்ற ஆன்மபோதம் ஜீவிக்குமி டத்து பதி என்றும், பசு என்றும், பாசம் என்றும் பிரித்து அறியப்படும்.

முத்தி காலத்தில் அவான்ம போதும் சீவியாது சிவத்துள் அடங்கின் முன் தோன்றிய பகுப்புகள் ஒன்றுந் தோன்றாது சிவம் தானாயிருக்கும். ஆகவே இம்மூன் றும் ஒன்றாய் ஆனதென்ன வெண்ணி லாவே என்பதுபோலாகும்.






# திருமணத்தகவல்

**பெயர்: சாமிநாதன் (எ) லட்சுமணன்**

பிறந்த தேதி: 1.8.1983

படிப்பு: **BCA, D.EEE**

தொழில்: வியாபாரம்

மாதவருமானம்: 25,000

முகவரி: 35B கிரிஸ்மா பிளாட் F3 ஐந்தாவது தெரு வெங்கடேஸ்வரா நகர் பொழிச்சலூர் சென்னை 600074.

தொலைபேசி: 98848 37619

# அருள்ஜோதி TV

அருள்ஜோதி
Aruljothi TV APP


## TCCL கேபிள் TV Channel No : 125

### நிகழ்ச்சிகளின்
### சன்மார்க்கிகளின் கருத்துக்கள்...













**அருள்ஜோதி தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பான நிகழ்ச்சிகளை 'ARULJOTHI YOUTUBE CHANNEL' மூலம் காணலாம்.**


**ARULJOTHI MEDIA**

No.:33, KENNEDY SQUARE MAIN ROAD,
TVK NAGAR, PERAMBUR,
CHENNAI – 600011
**CONTACT: 7305263516 044–35519288**
EMAIL: aruljothitelevision@gmail.com
WEB: aruljothitv.com


**BANK DETAILS**

**ARULJOTHI SANMARKKA TRUST**
**INDIAN BANK**
**A/C.No.:6206014778**
**IFSC CODE: IDIB000P034**
**BRANCH : PERAMBUR**

Aruljothi TV
+91 73052 63516
8883360800@okbizaxis


**Published by: S. Dhanalakshmi ,**

Published from New No.:33/Old No:17, Main Road, Kennedy Square, Thiru.Vi.Ka.Nagar, Perambur, Chennai – 11 Editor: Thayathirumati. Dhanalakshmi Ammaiyaar Printed at bharanipress, No77, Venkatadhiri street, kosapet, Chennai - 600012